316 316 1-

ஸ்ரீ தந்வந்தரயெ நம:

# வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை.

Vol. 12. | DECEMBER 1950. | No. 12




श्रीसुधादिसोदरौषधीशसंभवोज्वला
धीविलासहेतुगोप्रसारशोधितान्तरा॥
कामदा कलावती कवीन्द्रवर्णिता परं
...श्रया विभातु वैद्यचद्रिका॥

...டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.
... பண்டிட் P. S. ராமசர்மா, கரூர்.

வருஷ சந்தா 5—0—0

LB 211, N39VC
N50.12.12
199580

# பொருளடக்கம்.

—∘∘•∘∘—

பக்கம்.

1. சிலவில்லாத சேவையும் – அளவில்லாத பலனும் 1

2. आन्त्रिक ज्वरचिकित्सा (Treatment for Typhoid Fever.) 3
(S Panchanadan, Trichy.)

3. நேத்ரப்ரகாசிகை 22
(G. ஸ்ரீனிவாசய்யங்கார், தஞ்சாவூர்)

4. வைத்யச் செய்திகள் 24

---

N. B:- வைத்ய சந்திரிகையின் சந்தாவை இதுவரை அனுப்பாதவர்கள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

---

திருச்சி
ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.
17. சின்னக்கடைத் தெரு,
தெப்பக்குளம் P. O திருச்சிராப்பள்ளி.

வைத்தியர்களுக்கு
எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த
விலைக்கு சப்ளை செய்யப்படும்.
விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.



19958

## சிலவில்லாத சேவையும் — அளவில்லாத பலனும்.

தர்மத்தைக் குறித்துச் சொல்லும்பொழுதே சிலவில்லாமல் தர்மம் செய்யமுடியும் என்று பலர் எண்ணுவதில்லை. பணம் காசு சிலவு செய்யமுடியாதவர்கள் தர்மம் செய்ய முடியாது என்றே நினைக்கின்றனர். உண்மையில் பணம் காசு இருந்தால் சுகவாழ்க்கையை தேடுவார்களேயல்லாமல், தர்மத்தில் ஈடுபடுபவர் மிகவும் குறைவு. நமது தேசத்தில் பல அதிசயிக்கத்தகுந்த காரியங்களை சாதித்த மஹான்கள் எல்லோரும் துறவிகளாகவே வாழ்நாட்களை கழித்தவர்கள், அவர்கள் பணத்தை பொருட்படுத்தியிருந்தால் ஒன்றும் செய்திருக்கமுடிந்திருக்காது, இன்றும் நமது தேசத்திற்கு சுதந்திரத்திற்கு உழைத்தவர்களும் சிறந்த தியாகிகளாகவே கருதப்படுகின்றனர். அஞ்சாநெஞ்சம் வாய்ந்த பட்டேல் உயிர்விடும் தருவாயில்கூட அஸ்ஸாமில் பூகம்பத்தினால் கஷ்டப்படும் ஜனங்களையே நினைத்து நினைத்து வருந்தினாராம். இவரைப்போன்ற உண்மை தியாகிகளின் சேவையால்தான் நமது தேசம் விடுதலையடைந்தது என்று எல்லோரும் நினைக்கின்றனர். ஒற்றுமையும் ஒத்துழைப்பும் உருவாகாமல் எந்த சமூகமும் முன்னேற முடியாது. தேசீய வைத்தியத்திற்கு பணம் போராது. தேசீய வைத்யர்கள் ஏழைகள், தேசீய சர்க்கார் சிலவு செய்யபின் வாங்குகிறது, என்றெல்லாம் புகார் சொல்லியே காலம் போக்குவதாக இருக்கிறது இன்று நமது நிலைமை. இதனால் நன்மை ஏற்படும் என்று மனப்பால் குடிக்கவேண்டாம். நிலைமை மாறவேண்டுமேயானால், தேசீய வைத்யர்களில் உண்மை தியாகிகள் தோன்றவேண்டும். இப்பொழுது பலர் பல அரிய சேவைகளை செய்யவில்லை என்று நாம் சொல்லவில்லை. இதனால் தகுந்த பலன் கிட்டவில்லையே என்றுதான் கேட்கிறோம். லக்ஷ்யத்தை அடையாதவரையில் எவ்வளவு தியாகம் செய்தும் என்ன பயன். பகீரதனுக்கு முந்தினவர்கள் கங்கையை கொண்டுவர முயற்சிக்கவில்லையா? லக்ஷியத்தை அடைந்த பகீரதன் முயற்சியைத்தான் இன்று நாம் பகீரதப் பிரயத்னம் என்று சொல்லுகிறோமேயல்லாமல் மற்றவர்களைக் குறித்து யார் பேசுகிறார்கள். அதுபோல் தேசீய வைத்யத்தை உன்னத நிலையில் கொண்டுவர ஓர் பகீரதன் அல்லது ஓர் காந்திஜீயாவது இதுவரையிலும் தோன்றவில்லை. என்று சொல்லாமல் இருக்கமுடியவில்லை. எத்தனையோ பேர் தங்களை தேசீய வைத்தியத்தின் சுதந்திரத்திற்காக காந்திஜீக்கு மேல் பாடுபட்டதாக சொல்லிக்கொள்ளலாம். ஆனால் காந்திஜியால் தேசம் சுதந்திரமடைந்தமாதிரி, தேசீய வைத்தியத்தின் அடிமைத்தன்மை நீக்கப்படாதவரையிலும் யாரும் புகழுக்குரியவர்களாக முடியாது. தேசத்தின் சுதந்திரத்தைவிட தேசீய வைத்யத்தின் சுதந்திரம் மிகப் பிரயாசையால்தான் அடைய முடியும். ஏனென்றால் வெகு காலம் நம்மையாண்ட மேனாட்டார்கள் நமது தேசத்தின் சகலவித செல்வத்தையும் சுரண்ட பலவித காரியங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். அதனால்தான் தேசம்

சுதந்திரம் அடைந்தும் பழம் தலைவர்கள்முதற்கொண்டு பாமர ஜனங்கள் வரையிலும் மேல்நாட்டு நாகரீகத்தையே சிரமேல் வஹித்து வருகிறார்கள். அதனால் தேசத்திற்குத்தான் சுதந்திரம் கிடைத்ததாக கூறமுடியுமே யல்லாமல், தேசியத்திற்கு சிறிதும் சுதந்திரம் கிடைக்கவில்லை. இன்று இருக்கும் மனப்போக்கை நினைக்கும்பொழுது தேசியத்திற்கு இந்த யுகத்திலேயே சுதந்திரம் கிடைக்காதோ என்றுகூட பயப்பட வேண்டி இருக்கிறது. தேச சுதந்திரத்திற்கு அயல் நாட்டாரிடம் போரிட்டோம், ஆனால் தேசிய சுதந்திரத்திற்கு எதிராக இப்பொழுது அயல் நாட்டார் யாரும் இல்லை. நமது தேசத்து ஜனங்களின் மனதுதான் மாற வேண்டும். இது மிகவும் கடினமான காரியம்தான் ஏன் என்றால் தேசிய சுதந்திரம் நமக்கு வந்துவிட்டால் அயல் நாட்டார்கள் ஜீவிதம் மிகவும் கஷ்ட நிலைமைக்கு வந்துவிடும். உண்மையில் தேசத்திற்கு சுதந்திரம் தந்ததே தேசிய சுதந்திரம் நாம் அடைய முடியாமல் இருப்பதற்கேயாகும். தேசம் அடிமையாக இருப்பதினால் கப்பம் கெட்டும் லாபம் ஒன்றுதான். தேசியம் அடிமையாக இருப்பதினால் எல்லா சாமான்களையும் விற்று விற்று கொள்ளை லாபம் அடைகிறார்கள். இந்நிலைமை மாறவேண்டுமானால் இடைவிடாத பிரசாரம்தான் தேவை. वाचा धर्ममवाप्नुहि என்று தாயார் ஆஞ்சநேயரைப்பார்த்து சொன்ன உபதேசத்தையே நாமும் கைப்பிடித்தால் போதும். அதாவது பணம் காசு செலவில்லாமல் வாயால் மட்டும் பிரசாரம் செய்யச் செய்ய எல்லோருடைய மனதிலும் தேசியப் பற்றுதல் உண்டுபண்ண முடியும். இதில் விடா முயற்சியும், ஒத்துழைப்பும்தான் முக்கிய சாதனங்கள். இக்காலத்தில் எல்லாவித காரியங்களும் பத்திரிகைகளின் சகாயத்தால்தான் நடக்கிறது. அந்த கக்ஷிகளைச் சேர்ந்த பத்திரிகைகளின் வளர்ச்சியால்தான் அந்தந்த சமூகம் முன்னேற முடியும். இது எல்லோரும் அறிந்த விஷயம் நமது மண்டலப் பத்திரிகைக்கு பணம் தேடுவதற்காக நாம் இவ்விதம் கூறவில்லை நமது பத்திரிகைக்கு கிடைக்கும் பணம் ஒருவருக்கும் சொந்தமாகாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் வாசகர்கள் அடுத்த வருஷத்திற்கு தேசிய வைத்யத்திற்கு செய்யும் சேவையில் முக்கியமானது ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தாதாரர்களையாவது சேர்த்துத்தர சங்கற்பம் செய்துகொண்டால்போதும். ரிஜிஸ்ட்ரேஷன் விஷயமாக தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்று பலர் நினைக்கின்றனர். ரிஜிஸ்ட்ரேஷன் ஆகாத வைத்தியர்கள் ஒன்றுசேர்ந்து நமது பத்திரிகை மூலமும் இதர பத்திரிகை மூலமும் முறையிடவேண்டும். எவ்விதமும் பத்திரிகைகள் வளராமல் இக்காலத்தில் பெரியகாரியங்களை சாதிக்க முடியாது. ஆங்கில வைத்யர்களால் அளவில்லாத பத்திரிகைகள் நடத்தப்படுகின்றன. தமிழ் நாட்டில் வைத்ய பத்திரிகை மிகவும் குறைவு, முதலில் இந்நிலைமை மாறவேண்டும் இதற்கு செலவு ஒன்றும் இல்லை-வாயால் கைங்கரியம் செய்தால் அளவில்லாத பலனை அடைவோம்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 JAN 1951
MADRAS

உ

# आन्त्रिक ज्वरचिकित्सा.

## Treatment for Typhoid Fever.

கெடுதல் அடைந்த வாயு, ஜலம் முதலியவைகளால் இந்த ஜ்வரமானது பரவுகிறதென முன்பு சொன்னோம். ஸ்வஸ்தனாக இருந்தபோதிலும் ஜலத்தைக் கொதிக்கவைத்து, சூடாறினபிறகு அருந்துவது மேன்மை எனச் சொல்லலாம். தற்காலம் சில ஜனங்கள் கறந்த பாலை சிறிது நேரம் கழித்து காய்ச்சாமலே அருந்துவதை நாம் பார்த்திருக்கலாம். பணத்தாசை பிசாசால் பீடிக்கப்பட்ட பால் விற்கும் மனிதர்களும் தன்னால் விற்கப்படும் பாலில் ஜலம் கலக்காமல் ஒருபொழுதும் இருக்கமாட்டார்கள் என நிச்சயமாய்ச் சொல்லலாம் பாலில் ஜலத்தைக் கலக்கும் பொழுது இது நல்ல ஜலம் அல்லது கெட்ட ஜலம் என்ற விவேசக புத்தியும் சிறிதும் பால் விற்பவர்களுக்கு இருப்பதில்லை இவ்விதம் செய்வதால் எவ்வளவு கெடுதல்கள் வருகின்றன என்பதை பால் விற்பவர்களும், அதைக் காய்ச்சாமல் அருந்துவதால் உண்டாகிற உபத்ரவங்களைப் பால் வாங்குபவர்களும் சற்றேதும் அறிந்திலர். கெடுதலடைந்த ஜலம் கலந்த பாலைக்காய்ச்சாமல் அருந்துவதால், அதன்மூலம் க்ருமிகள் உட்சென்று (விஷாம்ஸம்) ஆந்த்ரிகஜ்வரம் போன்ற நோய்களை உண்டாக்குகின்றன. ஆதலால் நல்ல ஆரோக்யத்துடன் இருந்தபோதிலும் ஒவ்வொரு மனிதனும், பாலை நன்றாகக் காய்ச்சி கொதிக்கவைத்து பிறகு உபயோகித்தால் அது அவர்களுக்கு ஒரு அலாதியான அனுகூலத்தையே அளிக்குமெனச் சொல்லலாம். இவ்வியாதியால் பீடிக்கப்பட்ட மனிதனுடன் தொட்டுப்பேசுவது, அவனால் உபயோகப்படுத்தப்பட்ட வஸ்துக்களைத் தான் உபயோகிப்பது முதலான கார்யங்களை ஆரோக்யமுள்ள மனிதனும் செய்யாமல் இருப்பதே நன்மையென சொல்லத் தேவையில்லை.

कुष्ठज्वरश्च शोपश्च नेत्राभिष्यन्द एवच।
औपसर्गिकरोगाश्चसंक्रामन्तिनरान्नरम्॥

என்ற வாக்யங்களால் இம்மாதிரியான ஜ்வரங்களையும் தொற்று வ்யாதிகளுக்கு ஸமமாக நம் பெரியோர்கள் ஒப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்

இவ்வியாதியால் பீடிக்கப்பட்ட நோயாளியை, சுத்தமாயும் ப்ரகாசமாயும், நல்ல காற்றோட்டம் உள்ளதாயும் உள்ள வீட்டில் வசிக்கச் செய்யவேண்டும். கூடியவரை புதியதாகச் சுண்ணாம்பு அடித்த வீட்டில் ரோகியை வசிக்கச்செய்வது மிகவும் நல்லது

எனச் சொல்லலாம். ஏனெனில் ரோகியால் வெளிவிடப்படும் மூச்சுக்காற்றிலுள்ள (கரியமிலவாயு) விஷாம்சத்தைப் போக்கடித்து, அறையை சுத்தக் காற்றுள்ளதாகச் செய்யும் சக்தி சுண்ணாம்பிற்குள்ளது. ஆகலால்தான் நல்ல ஆரோக்யத்துடன் உள்ள ஜனங்களும் தங்கள் வீட்டின் அறைகளில் இரண்டு அல்லது நான்கு மாதங்களுக்கு ஒருதரம் சுண்ணாம்பு அடிக்கின்றனர் ரோகியின் உடலும், உடையும் சுத்தமாக இருக்கச்செய்ய வேண்டும். இரண்டு நாட்களுக்கொருதரம் நோயாளியின் உடம்பை கொதித்து கொஞ்சம் சூடாகிய ஜலத்தில் சுத்தமான துணியை நனைத்து நன்ருகப் பிழிந்து அந்தத் துணியால் துடைத்து சுத்தம் செய்யவேண்டும். இவ்விதம் செய்வதால் மயிர்கால்கள், மற்ற இடங்களில் உள்ள அழுக்கு நீக்கப்பட்டு அதன்மூலம் வேர்வையுடன் ஜ்வரோஷ்மாவும், விஷாம்சமும் வெளிவர அனுகூலமாக இருக்கும். இவ்விதம் வெளி வருவதால் ஜ்வரமும் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பிக்கும். மலம் மூத்திரம் முதலியவைகளின் விஸர்ஜனம் செய்வதற்காக உள்ள பாத்திரங்களை நன்ருக சுத்தம் செய்து கொதிக்கும் ஜலத்தில் சிறிதுநேரம் வைத்து பிறகு க்ருமிநாசகமான ஔஷதத்ரவங்களை அவைகளில் ஊற்றி ரோகியின் சமீபத்தில் மறுபடியும் வைக்க வேண்டும். ரோகி இருக்கும் அறையில் ஈ, கொசு முதலியவைகளின் ஸஞ்சாரம் இல்லாமலும், வெளியிலிருந்து வெய்யிலின் கானல் உட்புறம் தாக்காமலும் இருக்கவேண்டும். ரோகியிடம் தூக்கத்தைக் கொடுக்கக்கூடியதோ அல்லது அதிகமான சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதோ உள்ள விஷயங்களை, உறவினர்களோ மற்றவர்களோ பேசுவதைத் தடைசெய்ய வேண்டும் ரோகி படுத்துக்கொண்டிருக்கும் படுக்கை சுத்தமாயும், மிருதுவாயும் இருக்கவேண்டும் இந்த ரோகத்தில் குடலிலுள்ள ச்லேஷ்மிகலா மிகவும் பாதிக்கப்படுவதால், மிகவும் சீக்கிரமாக ஜீர்ணமாகக்கூடிய ஆஹாரத்தையே ரோகிக்கு கொடுப்பது மேல். ஆகலால்தான் பசுவின் பால் மிகவும் நல்லது என்று கூறுகின்றனர் சிலர்.

(पञ्चवल्कल) வேலம்பட்டை போட்டு காய்ச்சிய ஜலத்தில் படிக்காரப்பொடி, இந்துப்பு இரண்டும் கொஞ்சம் கலந்து காலை மாலை இருவேளை வாய்கொப்பளிப்பதற்கு கொடுக்கவேண்டும். இவ்விதம் கொப்பளிப்பதால், வாயும் பற்களும் எப்பொழுதும் சுத்தமாக இருக்கும். இதுபோல் எலுமிச்சம்பழச் சாற்றை கொதிக்கும் ஜலத்தில் கலந்து கொஞ்சம் சூடாயின பிறகு கொப்பளிக்கக் கொடுக்கலாம்.

இந்த ஜ்வரத்தில் "க்வினைன்" சிறிதளவும் உபயோகப் படுத்தக்கூடாது. க்வினைன் கொடுப்பதால் ஜ்வரம் அதிகமாவதுடன், அதன் உபத்திரவங்களும் அதிக நாள் நீடிக்க நேரிடும்.



அதிஸாரம் உண்டானாலும் முதலிலேயே உடனே நிறுத்தும்படியான ஔஷதங்களைக் கொடுத்து நிறுத்த முயற்சிப்பது, வெளியில் வரக்கூடிய தோஷங்களை உட்புறமே நிறுத்தி, அதினால் மறுபடியும் ரோகிக்கு கெடுதலையே உண்டாக்குவதாக ஆகும். ஆனால் தினந்தோறும் விடாமலும், அதிகமாகவும் அதிஸாரம் உண்டானால் அதை நிறுத்தாமல் இருப்பதும் நோயாளிக்கு மிகவும் கெடுதலையும், உயிருக்கே ஆபத்தைக் கொடுக்கக்கூடியதாகவும் ஆகுமெனச் சொல்லவேண்டியதில்லை.

च्यवमानं ज्वरोत्क्लिष्टं उपेक्षेतमलं सदा।
पक्वोऽपिहि विकुर्वीत दोषः कोष्ठे कृतास्पदः॥
अतिप्रवर्तमानंवा पाचयन्संग्रहं नयेत्।

என்ற நம் முன்னோர்களின் வாக்யங்களிலிருந்தும் முன்சொன்ன அபிப்ராயங்களை தெரியவரும்

அதிகமான பேத்தல், தூக்கமின்மை இவைகளை உடன் தடுப்பதற்கு முயற்சிக்கவேண்டும் அதிகமான வாந்தி உண்டானால் மாதுளம் பழத்தின் ரஸத்தில் கொஞ்சம் சர்க்கரை கலந்து கொடுக்கவேண்டும். இல்லாவிடில் நீலகிரி தைலம் (Eucalyptus Oil) 3 அல்லது 4 சொட்டு சர்க்கரையுடன் சேர்த்துக்கொடுத்தால் உடன் வாந்தி நிற்கும் நாக்கு வரண்டு இருந்தால் அதில் தேனை காலை மாலை இருவேளையும் தடவவேண்டும். வயிற்றுப்புசம் அதிகம் இருந்தால், வயிற்றின்மேல் பெருங்காயத்தை சூடான ஜலம் விட்டரைத்து லேபம் போடவேண்டும் இல்லாவிடில் டர்பன்டைன் தைலத்தைத் தடவி, அனலில் கையைக்காட்டி ஒத்தடம் கொடுக்கலாம். இந்த ஜ்வரத்தின் ஆரம்பத்தில் மலபந்தம் இருந்தால் மிருதுவான விரேசனம் கொடுக்கலாம். இந்த ஜ்வரத்தை ஆரம்பத்திலேயே பலாத்காரமாகப் போக்கடிப்பதற்கு ஔஷதங்களைக் கொடுத்தால் அது ரோகிக்கே கெடுதலை விளைவிக்குமென சந்தேகமறச் சொல்லலாம். இந்த ஜ்வரத்தில் எல்லா தோஷங்களும் ப்ரகோபம் அடைந்து ரஸாதி தாதுக்களில் லீனமாக இருக்கும். அவ்விதமுள்ள தோஷங்களை கொஞ்சம் கொஞ்சமாக பாசனம் செய்து லக்ஷணங்களை ஶமனம் செய்யக் கூடிய ஔஷதங்களையே இவ்வியாதியில் கொடுக்கவேண்டும்.

இதில் ஶ்வஸனகம் (Pneumonia) அதிக பேத்தல், வரட்டு இருமல் (Bronchitis) வாந்தி, தாஹம் போன்ற உபத்ரவங்கள் உண்டானால் அவைகளை உடனே தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். நம் முன்னோர்களும் "ப்ரதான ரோகம் சிகித்சை செய்யப்படும்பொழுதே அதன் உபத்ரவங்களும் சமனத்தை அடையலாம். அவ்விதம் இல்லாவிடில், உபத்ரவங்களும் ப்ரதான வியாதியைவிட பலமுள்ளதாக இருந்தால், முதலில் உபத்ரவங்களை

சமனம் செய்வதில்தான் முயற்சி எடுக்கவேண்டும்" எனக்கூறியிருக்கின்றனர். இவ்வபிப்ராயங்களை அடிப்படையாகக்கொண்ட வாக்யங்கள் பின்வருமாறு அவையாவன :—

छर्दिमूर्छा पिपासादीन् अविरोधाज्वरस्यतु ।
उपद्रवान् जयेच्चापि प्रत्यनीकेन हेतुना ॥
तेषां प्रधान प्रशमेप्रशमोऽशाम्यतस्तथा ।
पश्चाच्चिकित्सेत्तूर्ण वा बलवन्तमुपद्रवम् ॥

இந்த ஜ்வரம் ஆரம்பித்தவுடன் ரோகிக்கு மூன்று அல்லது நான்கு நாட்கள் வரை கேவலம் உஷ்ண ஜலத்தைத்தான் சூடாறின பிறகு ஆகாரமாகக் கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்வதால் ரோகிக்கு தேஹோஷ்ணநிலை அதிகமான பிறகும் பலஹீனம் அவ்வளவு வருகிறதில்லை. உடல் உஷ்ணநிலை குறைந்தபிறகும் அதிக நாள் பலஹீனம் இருப்பதில்லை சிறிது நாட்களிலேயே உடலுக்கும் சக்தி க்ரமமாகவும், சீக்ரமாகவும் வர ஆரம்பிக்கும். இவ்விதம் லங்கனம் செய்வதால் தோஷங்கள் கொஞ்சம் பாகத்தை அடைய ஆரம்பிக்கின்றன, ஆனால் லங்கனத்தால் பித்தப்ரகோபம் அதிகமாகலாம். ऊष्मा पित्तादृते नास्तिज्वरो-नास्त्यूष्मणा विना । என்றபடி பித்த ப்ரகோபம் அதிகரிப்பதால் ஜ்வரமும் அதிகரிக்கத்தான் செய்யும் என்ற சந்தேகம் தோன்றலாம். ஒரு விஷயத்தில் பித்தப்ரகோபம் செய்யக்கூடியதாக இருந்தபோதிலும் லங்கனம், பித்தத்ரவாம்சத்தைக் குறைக்கக் கூடிய சக்தியும் அதற்கு உண்டு என்றுதான் சொல்லவேண்டும். இவ்விடத்தில் நம் ஆசார்யர்களின் வாக்யங்களைக் குறிப்பிடவேண்டியிருக்கிறது; அவையாவன

(1) यत्तु पित्तहरत्वं उक्तं अनशनस्य, पित्तद्रवांशक्षयात् ।
(2) कफपित्ते द्रवे धातू सहेते लंघनं महत् ।

என்பன. ஜ்வரம் ஆரம்பித்து நான்கு நாட்கள் லங்கனம் செய்த பிறகு ரோகிக்கு காலை மாலை இருவேளையும் ஆகாரத்திற்கு பதில் பசும்பாலில் துளசி கொஞ்சம் போட்டு காய்ச்சி, பிறகு துளசி இலையை எடுத்துவிட்டு சர்க்கரை சேர்த்து கொடுக்கவேண்டும் நடுப்பகலில் மாதுளைச்சாறு அல்லது ஆரஞ்சி பழத்தின் ரஸம் இவ்விரண்டில் ஏதாவது கொடுக்கவேண்டும் சிலர் இந்தசமயம் ரோகிக்கு (Bread) பன்ரொட்டி கொடுப்பதில் ஆக்ரஹம் உள்ளவர்களாக இருக்கின்றனர். பன்ரொட்டி கொடுப்பதால் ரோகிக்கு உண்டாகும் கெடுதல்களை சற்றேனும் அறிகிறதில்லை. ரோகிக்கு பாலில் விருப்பம் இல்லாவிடில் புழுங்கலரிசி கஞ்சியில் கொஞ்சம் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம். அதுவும் மேல் தெளிவாகத்தான் கொடுக்கவேண்டும். சாப்பாட்டில் ப்ரியம்



உள்ளவனாக இருந்தபோதிலும் ரோகிக்கு அன்னத்தை (சாதம்) ஆகாரமாகக் கொடுத்தால் பலஹீனமும்; ஜ்வரத்தின் தொடர்ச்சி அதிகநாள் ஆகக்கூடும். தோஷங்கள் கொஞ்சம் பாகம் அடைந்த பிறகு மறுபடியும் பாசகங்களான க்வாதங்களோ அல்லது மருந்துகளோ கொடுக்கவேண்டும்.

சீந்தில்கொடி; ஓமம்; துளசி இலை; மிளகு இவைகளை கஷாயமாக வைத்து நன்றாகச் சூடாறினபிறகு 1 அவுன்ஸ் எடுத்து கொஞ்சம் தேன் கலந்து கொடுக்க தோஷங்கள் நன்றாகப் பாகத்தையடைந்து, பித்தப்ரகோபமும் சமனத்தையடையும்.

பரூஷகாதி, தகராதி, முஸ்தகாதி கஷாயங்களை இந்த ஜ்வரத்தில் தோஷ பாசகங்களாகக் கொடுக்கலாம்.

பரூஷகாதிக்வாதம் :— பேரீச்சை, கடுக்காய், தானிக்காய், நெல்லி, தேவதாரு, ரக்தசந்தனம், கடுகுரோகிணி, ஓரிலை, இவைகளை கஷாய முறைப்படி க்வாதம் செய்து நன்றாக சூடாறினபிறகு இரண்டவுன்ஸ் வீதம் கொடுத்துவர தோஷங்கள் பாகத்தையடைந்து ஜ்வரம் குறைய ஆரம்பிக்கும்

தகராதிக்வாதம் :— தகரவிதை, பர்பாடகப்புல், கொன்னை, நொச்சி, கடுகுரோஹிணி, ஜடாமாம்ஸீ, ப்ராம்ஹீ, திராக்ஷை, ரக்தசந்தனம், தசமூலம் இவைகளை, க்வாத விதிப்படி கஷாயம் வைத்துக்கொடுக்க ஜ்வரம் குறைய ஆரம்பிக்கும்.

முஸ்தகாதி கஷாயம் :— நீர்நொச்சி, பர்பாடகப்புல், தேவதாரு, சுக்கு, த்ரிபலை, காஞ்சோறி, வட்டத்திரிப்பி, பிப்பலிமூலம், கடுகுரோஹிணி இவைகளை க்வாதம் செய்து சூடாறினவுடன் ஒவ்வொரு அவுன்ஸ் வீதம் கொடுக்க ஜ்வரம் சமனமடையும்.

லக்ஷ்மீநாராயண ரஸம், மதுராந்தகவடி, ஸூதசேகரரஸம் அமிர்தாஷ்டக க்வாதம், மதுரஜ்வராந்தக க்வாதம் இவைகளும் இந்த ஜ்வரத்தின் வேகம், காலம் இவைகளைக் கவனித்து கொடுக்கலாம். லக்ஷ்மீநாராயண ரஸம், ஒவ்வொரு ரத்தி, மதுராந்தகவடீ, 2 to 4 ரத்தி, ப்ரவாளபிஷ்டீ இரண்டிரண்டு ரத்தி இவைகளைக் கலந்து காலை மாலை இரண்டு வேளை தேனுடன் கொடுக்கவேண்டும். நடுப்பகலில் மதுராந்தகவடீ 2 ரத்தி ப்ரவாள பிஷ்டீ 2 ரத்தி இரண்டும் சேர்த்து தேனுடன் கொடுக்கவேண்டும். இவ்விதம் கொடுத்து வருவதால் 21 நாட்களுக்குள்ளும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் முன்பே இந்த ஜ்வரம் இறங்க ஆரம்பிக்கும்.

சிலசமயம் ஜ்வரம் இறங்கினபிறகும், ரோகி செய்யும் அபத்யாஹார விஹாரங்களால் இந்த ஜ்வரம் மறுபடியும் பயங்கரமாக திருப்பிக்கொள்ளக்கூடும். அவ்வமயம் 5 அல்லது 6 நாட்கள் ஸூத சேகர ரஸத்தை 1 ரக்தி வீதம் தேனுடன் கொடுத்து விட்டு பிறகு லக்ஷ்மீநாராயண ரஸத்தை ஒவ்வொரு ரக்தி வீதம் காலை மாலை இருவேளையும் கொடுத்துவர வேண்டும்.

ரோகிக்கு அதிகமான தாகம் உண்டானால் முன் சொன்ன முஸ்தாதி க்வாதத்தில் ஒவ்வொரு அவுன்ஸ் கொடுக்கலாம். இல்லாவிடில் ப்ரவாள பிஷ்டி 2—2 ரக்தி, குடூசீசத்வம் 4 ரக்தி, லக்ஷ்மீநாராயண ரஸம் 1—1 ரக்தி வீதம் தேனுடன் கலந்து காலை, மாலை, நடுப்பகல் மூன்றுவேளையும் ஆகாரத்திற்கு முன்பு கொடுக்கவேண்டும் மேல்சொன்ன ஔஷதங்களின் செய்முறை:—

(1) लक्ष्मीनारायणारस :— சுத்தி செய்த ஹிங்குளம், அப்ரக பஸ்மம் சுத்தி செய்த கந்தகம், படிக்காரம், சுத்தி செய்த வத்சநாபி, கடுகுரோஹிணீ. அதிவிடயம், பிப்பலி, வெட்பாலரிசி, இந்துப்பு ஆகியவைகளை ஸம பாகமாக எடுத்து நாகதந்தியின் சாற்றில் மூன்று நாட்களும் த்ரிபலா கஷாயத்தில் மூன்று நாட்களும் சேர்த்து அரைத்து ஒவ்வொரு ரக்தீ வீதம் மாத்திரைகள். உருட்டவும்.

அளவு :— ஒவ்வொரு ரக்தி வீதம் இஞ்சிச் சாறு அல்லது தேனில் தனியாக கொடுக்கலாம்.

உபயோகம் :— துஷ்ட ஜ்வரம், ஸந்நிபாதம், விஷூசிகா, விஷமஜ்வரம், அதிஸாரம், க்ரஹணீ, ரக்தாதிஸாரம், ப்ரமேஹம், சூலம், சூதிகா ரோகம், வாதவ்யாதி, குழந்தைகளுக்குவரும் தனுர்வாதம் இவைகளை இம்மருந்து போக்கடிக்கும்.

இந்த ரஸமானது வியர்வையை உண்டுபண்ணுவதுடன் தோஷ பாசகமாகவும், வெளியிலிருந்து வந்த ஜ்வரத்தை உண்டு பண்ணின விஷாம்சத்தையும் நாசம் செய்யும் சக்தியுள்ளதாக இருக்கிறது. இந்த மருந்து ரஸம், ரக்தம் இவைகளை ஆதாரமாகக் கொண்டு உண்டான ஜ்வரத்திலும், விசேஷமாக ஆந்த்ரிகஜ்வரத்தின் தீவ்ராவஸ்தையில் மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கிறது. இந்த ரஸம் வியர்வையை உண்டாக்குவதாக இருந்தபோதிலும் ஹ்ருதயத்திற்கு பலக்குறைவை கொடுக்கக்கூடியதல்ல என நிச்சயமாய்ச் சொல்லலாம். தனுஸ்தம்பம், அபதானகம், ஆக்ஷேபகம் முதலான வாத நாடீ கேந்திரங்களின் விக்ருதியால் உண்டாகிற ரோகங்களில், எப்பொழுது ஜ்வரம் வர ஆரம்பிக்கிறதோ அவ்வமயம் இந்த ரஸத்தைக் கொடுப்பதால் ஜ்வரமும், வாதப்ரகோபமும் சீக்ரமாகவே சமனத்தை அடைகிறது.



ஆந்த்ரிக ஸன்னிபாதத்தின் ஆரம்பத்தில் இந்த மருந்தைக் கொடுப்பதால் ஆந்ரிக விஷாம்சம் குறைவதுடன் தோஷபாகமும் நன்றாக உண்டாகி இரண்டு மூன்று வாரங்களில் ஜ்வரமும் குறைய ஆரம்பிக்கும், நாற்றத்துடன் கூடிய அதிஸாரமும், ஜ்வரம் 104°—105° வரை அதிகரித்திருந்தாலும் லக்ஷ்மீநாராயணரஸம் மதுராந்தகவடீ இரண்டும் கலந்து தேனுடன் கொடுக்க தாகம், அதிஸாரம், ஜ்வரம் இவைகள் க்ரமமாக குறைய ஆரம்பிக்கும். ஆனால் லக்ஷ்மீநாராயண ரஸத்தை அதிக அளவில் கொடுப்பதையும் நிஷேதிக்கின்றனர் விருத்த வைத்தியர்கள். இந்த ஜ்வரத்தில் விசித்ர விசித்ரங்களான உபத்ரவங்கள் உண்டாகக்கூடும். அப்பொழுது உபத்ரவானுஸாரம் கொடுக்கக்கூடிய மருந்துகளுடன் இந்த ரஸத்தையும் சேர்த்தே கொடுக்கவேண்டும். ஆந்த்ரிக ஜ்வரம் சமனமானபிறகு உண்டாகிற க்ரஹணீ ரோகத்திலும், கெட்ட ஜலத்தாலுமுண்டாகிற அதீஸாரத்திலும் (வயற்றில் வலி கம்மியாக இருக்கும் ரக்தம் கொஞ்சம் கொஞ்சமாக மலத்துடன் வெளிவரும்) இந்த ரஸத்தை தேனுடன் கொடுப்பதால் நல்ல பலனும் கிட்டுகிறது. சிலசமயம் இந்த மருந்தை ரோகிக்கு கொடுப்பதால் வியர்வை அதிகமாக வெளிக்கிளம்பி உடலில் சில்லிப்பு தட்டலாம். அப்பொழுது ப்ரவாளபிஷ்டி 2 ரக்தீ குடூசீஸத்வம் 2 ரக்தீ தேனில் சேர்த்து கொடுத்து வரவேண்டும். இந்த ரஸம் குடல், யக்ருத், ப்லீஹா, ரஸம், ரக்தம், மாம்ஸம் இவைகளில் உண்டாகிற விகாரங்களைத் தடுக்கக்கூடியது.

(2) मधुरान्तकवटी :— மௌக்திகபிஷ்டி 1 மாஷம், கஸ்தூரி 2 மாஷம், நாககேசரம் 3 மாஷம், ஜாதிக்காய் 4 மாஷம், ஜாதிபத்திரி 5 மாஷம், க்ராம்பு 6 மாஷம், துளஸீபத்ரம் 7 மாஷம், அப்ரகபஸ்மம் 8 மாஷம் எல்லாவற்றையும் நன்றாக அரைத்து கலந்து பிறகு 3 மணி நேரம் இஞ்சி ஸ்வரஸத்தில் அரைத்து, ஒவ்வொரு ரக்தீ வீதம் மாத்திரைகள் செய்யவேண்டும்.

(மௌக்திகபிஷ்டி செய்யும் முறை:— நல் முத்தை முதலில் ஒரு இரும்பு கல்வத்தில் போட்டு அரைத்து நன்றாக சூர்ணம் போல் செய்யவும். பிறகு பீங்கான் கல்வத்தில் பன்னீர் (Rose Water) விட்டு இந்த சூர்ணத்தையும் கலந்து நன்றாக அரைத்து வைக்க வேண்டும்.)

அளவு:— இந்த மதுராந்தகவடியைத் தனியாக உபயோகிப்பதென்றால் 1½ ரக்தியிலிருந்து 2 ரக்தீ வரை ஒரு நாளில் 3 மணிக்கொருதரம் இஞ்சிரஸம் அல்லது சூடாகிய ஜலத்துடன் கொடுக்கலாம்.

உபயோகம் :— இந்தவடி ஆந்ரிக ஜ்வரத்தின் எந்த நிலைமையிலும் பயன் தரக்கூடியது எனச் சொல்லலாம். குடலை சக்தியுள்ளதாக இதுசெய்வதுடன், தாகத்தையும் தணிக்கும். அபத்யம் செய்வதாலும் மருந்துகளை மறதியாக மாற்றிக்கொடுப்பதாலும், சிலசமயம் இந்த ஜ்வரத்தின் வேகம் அதிகமாகலாம் அப்பொழுது இது (இந்த வடி) மிகவும் நன்மை செய்யக்கூடியதாக ஆகிறது.

**प्रवालपिष्टी** :— சுத்தமான ப்ரவாளத்தை ஒரு இரும்பு கலுவத்தில் நன்ருக சூர்ணம் செய்து 21 நாட்கள் Rose Water (பன்னீர்)ல் தினம் 12 மணி நேரம் நன்ருக அரைக்கவேண்டும். கல் கலுவத்தில் இதை அரைத்தால் கல்லின் சிறிய அணுக்குகள் (பாகங்கள்) அதில் சேர்ந்து கெடுத்துவிடும். சிலர் 7 நாட்கள் வரை இதை அரைத்து தயார் செய்கின்றனர் ஆனல் அதில் ரோக ரோதக சக்தி அவ்வளவாக இருக்காதெனவே சொல்லலாம். எவ்வளவுக்கெவ்வளவு அரைவு அதிகமாகி மிகவும் மிருதுவாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் சக்தியும் கூடுதலாக ஆகும். பிஷ்டி நன்ருக அரைவுபட்டால் அது நிச்சயமாய் வாரிதரமாக ஆகும் அதுதான் உடன் பலனளிப்பதாக ஆகும்.

அளவு :— இதைத் தனியாக உபயோகிப்பதென்ருல் 1ல் இருந்து 2 ரத்தி வரை ஒரு நாளில் இரண்டு வேளை குடூசீஸத்வம் தேன் இரண்டுடனும்; குல்கந்து, மற்ற ரோகானுஸாரம் உள்ள அனுபானங்களுடனும் கொடுக்கலாம்.

உபயோகம் :— ப்ரவாளபிஷ்டீ, க்ஷயம், பித்த விகாரங்கள், ரக்தபித்தம், காஸம், ஸ்வாஸம், நேத்ர ரோகம் ஆகியவைகளைப் போக்கடிக்கும் ப்ரவாளம், மதுரம், அம்லம் இரண்டு ரஸத்துடன் கூடியது. பித்தாதி தோஷங்களையும் போக்கடிப்பதுடன், சுக்ரத்தையும், தேகத்தின் காந்தியையும் அதிகரிக்கச் செய்யும். இந்த பிஷ்டியானது பஸ்மத்தைக் காட்டிலும் பித்தசாமகமாகவும் ஸௌம்யமாக இருப்பதால் பித்த யுக்தமான சுஷ்க காஸம், ரக்த ப்ரதரம் இவைகளைப் போக்கடிக்கக் கூடியதாகவும், மதுரம் அம்லம் இரண்டு ரஸத்தோடு கூடியதாக இருந்தபோதிலும் தீபன பாசனமாகவும் இருக்கிறது ஸன்னிபாத ஜ்வர ஆரம்பத்தில் லங்கனம் செய்துவிட்டு பிறகு தோஷ பாசங்களான மருந்துகள் கொடுக்கும் சமயம், இந்த பிஷ்டியையும் சேர்த்து கொடுத்தால் மிக்க பலன் தருவதாக ஆகும். பித்தாதிகமான ஸன்னிபாதத்தில் தாகம், த்ருஷ்ணை, தலைவலி, அதிக வியர்வை வருதல், தூக்கமின்மை, பேத்தல் வாந்தி ஆகியவைகள் இருந்தால் இத்துடன் குடூசீஸத்வமும் சேர்த்து கொடுக்கவேண்டும் ப்ரவாளபிஷ்டீ ரக்தபித்தத்தில் மிகவும் உபயோகமுள்ளதாகக் கருதப்படுகிறது ரக்தபித்தமானது, பித்தப்ரகோபத்தால் உண்டாகிறதென யாவரும் அறிந்த விஷயம்



पित्त विदग्ध स्वगुणैः विदह्यादाशुशोणितं

என்ற முன்னேர்களின் வாக்யப்படி முதலில் பித்ததோஷமானது விதாஹத்தையடைந்து, பின் தன் ஆச்ரயமான ரக்தத்தையும் விதாஹம் அடையும்படி செய்கிறது விதக்தமான ரக்தம் துஷ்டியடைந்து அதில் பித்தத்தின் ஆக்னேயாம்சம் அதிகமாகி அதினல் ரக்த வாஹினிகள் துஷ்டியடைந்து அவைகளின் கடினத்தன்மை குறைகிறது. இவ்விதம் குறைவதால் அவைகளின் சுருங்கும் விரியும் தன்மையும் குறைவுபட்டு, அதிகமான ரக்தம் உடல் முழுவதும் பரவும் சமயம் ரக்த வாஹினிகள் உடைபட்டு அதன் வழியாக ரக்தம் வெளிவர ஆரம்பிக்கிறது இவ்விதம் வெளிவரும் ரக்தம் சில மனிதர்களுக்கு தொடர்ச்சியாகவும், வேறு சிலருக்கு விட்டுவிட்டும்வரும் இச்சமயம் மூலகாரணமான விதக்த பித்தத்தை சமனம் செய்வதற்கு இந்த பிஷ்டியைக் கொடுக்க வேண்டும். இந்த பிஷ்டியால் பித்தத்தின் உஷ்ணாம்சம் குறைந்து, விதாஹமும் குறைய ஆரம்பிக்கிறது. பிறகு ரக்தமும் சுத்தமாக்கப்படுகிறது. ஆந்திரிக ஸன்னி பாதத்தில் உண்டாகிற உபத்ரவரூபமாக வெளிவரும் ரக்தத்தைத் தடுக்கவும் இந்த மருந்தைக் கொடுக்கலாம்.

ரக்த பித்தத்தில் (Haemophila) என்ற ஒரு ப்ராக்ருதிகமான பேதம் உண்டு. சில மனிதர்களுக்கு அவர்களின் ப்ரக்ருதி விசேஷத்தால் கோடை காலத்தில் அதிகமான வெய்யிலில் சுற்றுவதால் அவர்களின் மூக்கிலிருந்து ரக்தப் பெருக்கு உண்டாகும். இதுபோல் அடிபட்டு காயம் உண்டானலும் அதிகமான ரக்தப் பெருக்கு உண்டாகும். ஆனல் ரக்தப்பெருக்கு நிற்காமல் தொடர்ச்சியாக வெளி வந்துகொண்டே இருக்கும் இதற்குக் காரணம் ரக்தத்தில் Clotting Power (இறுகும் தன்மை) குறைந்திருப்பதே இது பெரும்பாலும் புருஷர்களுக்கே உண்டாகும். ஸ்திரீ இவ்வித ப்ரக்ருதியாக இருந்தால் அவர்களுக்கு உண்டாகும் மாஸிக தர்மமும் (Menses) தொடர்ச்சியாக இருப்பதுடன், அதனல் அநேக உபத்ரவங்களும் நேரிடலாம். இச்சமயம் ப்ரவாள பிஷ்டியும், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மமும் சேர்த்து கொடுத்து வரவேண்டும். ரக்த பித்தத்தின் தீவ்ராவஸ்தையில் இந்த பிஷ்டியை அதிக அளவில் கொடுக்கலாம் ஆனல் ஜீர்ணவஸ்தையிலும், ப்ராக்ருதிகமான பேதத்திலும் குறைந்த அளவில் கொடுப்பதுதான் நன்மை

ஸ்திரீகளுக்கு அவர்களின் கர்பாசயத்திலும், வெளி மார்க்கத்திலும் உண்டாகிற விக்ருதிகளால் ப்ரதரம் உண்டாகிறது. கர்பாசயம் யோனி மார்க்கம் இவைகளில் உள்ள ரக்த வாஹினிகள் பின்னமாவதால் ரக்த ப்ரதரம் உண்டாகிறது. ச்வேதப்ரதரமானது ச்லேஷ்மிக கலாவிலிருந்து உண்டாகிற ப்ரவாஹத்தால்

ஏற்படுகிறது. இவைகளுக்கு இரண்டு விதமான சிகிச்சைகள் உண்டு. (1). உத்தர பஸ்தி மூலம் யோனி, கர்பாசயம் இரண்டையும் சுத்தமாயும், ஸ்வச்சமாயும் செய்வது (2) அடிவயிற்றின் மேல் ரோக நிரோதகமான ஔஷதங்களைத் தடவி, உள்ளுக்கு ஔஷதங்களைக் கொடுப்பது என்பன. துர்கந்தத்துடனும், ஜலம்போலும், சூட்டுடனும், இந்த ரோகத்தில் யோனி மார்க்கம் வழியாக ஸ்ராவம் உண்டாகும் அப்பொழுதும் எரிச்சலும், அந்த ஜலம்பட்ட இடங்களில் சிறிய கொப்பளங்களும், அதிகமான வலியும் உண்டாகும்.

அப்பொழுது ப்ரவாள பிஷ்டியை உசீராஸவத்துடன் சேர்த்து கொடுப்பதால் நல்ல குணம் கிட்டுகிறது. இதுபோல் ரக்தப்ரதரத்திலும், அத்யார்த்தவத்திலும் ப்ரவாள பிஷ்டி, ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், வங்க பஸ்மம் இவைகளைச் சேர்த்து தாடிமாவலேஹத்துடன் கலந்து கொடுத்தால் அவைகள் சீக்ரமாகவே சமனத்தையடையும் . ரக்தார்சஸ், பித்தார்சஸ் இரண்டிலும் ப்ரவாள பிஷ்டி நாககேஸரம், குடூசீஸத்வம் இவைகளைக் கலந்து ஆட்டுப்பாலுடன் கொடுக்கவேண்டும்.

**सूतशेखररस :-** சுத்தபாதரஸம், சுத்த கந்தகம், பொரித்த படிக்காரம், சுத்த வத்சநாபி, ஸ்வர்ண பஸ்பம், தாம்ர பஸ்பம், சுக்கு, மிளகு, திப்பிலி, சுத்த ஊமத்தை, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நாககேஸரம் ஏலக்காய் வில்வப்பிசின், சங்கபஸ்பம், கச்சோரம், ஆகிய 17 சாமான்களையும் ஸமபாகமாகச்சேர்த்து கரிசலாங்கன்னிச் சாற்றில் 12 மணிநேரம் விடாமல் அரைத்து ஒவ்வொரு ரக்தி வீதம் குளிகைகள் செய்யவும்

கவனிக்கவேண்டியவை: கரிசலாங்கன்னிச் சாற்றை ½ மணி நேரம் அசங்காமல் பாத்திரத்துடன் வைக்கவும். ஏனெனில் கொஞ்சம் நேரம்கழித்து வண்டலெல்லாம் அடியில்தங்கி சுத்தமான சாறு கிடைக்கவேண்டும். பிறகு தெளிவை எடுத்து பட்டு வஸ்த்திரத்தால் வடிகட்டவேண்டும் இல்லாவிடில் வண்டலும் ரஸத்துடன் கலந்து மருந்தைக் கெடுத்துவிடக்கூடும். 21 நாட்கள்வரை மேற்படி மருந்துகளை கரிசலாங்கன்னிச் சாற்றில் அரைத்து பிறகு மாத்திரைகளாக உருட்டினால் சீக்கிரமாகவே பலன்தரக்கூடிய சக்திவாய்ந்ததாக ஆகுமென பெரியோர்களின் சம்பிரதாயம்.

அளவு:- ஒருமாத்திரையிலிருந்து 3 மாத்திரைகள்வரை ஒரு நாளில் 2 அல்லது 3 தடவை பசும்பால் அல்லது நெய், தேன் மற்ற அனுபானங்களுடன் கொடுக்கலாம்.

உபயோகம்:- அம்லபித்தம், உதரசூலம், குல்மம், ஸங்க்ரஹணி, அதிஸாரம், உதாவர்த்தம், ஜ்வரம், க்ஷயம் இவைகளில்



இந்த ரஸம் கொடுக்கப்படுகிறது. அம்ல பித்தத்தில் ஸூதசேகர ரஸத்தை அபாமார்க்க க்ஷாரத்துடனோ அல்லது குல்குந்துடனோ தினம் மூன்று வேளை கொடுக்கவேண்டும். இல்லாவிடில் ப்ரவாளபிஷ்டி, குடூசீஸத்வம், த்ராக்ஷாவலேஹம் இவைகளுடன் கலந்துகொடுக்கலாம் இந்த ரஸமானது பித்தத்தின் அம்லத்தன்மையையும், தீக்ஷ்ணத்தன்மையையும் சமனம் செய்யக்கூடியது. இதுபோல் வாதப்ரகோபத்தையும் நாசம்செய்யும் இயல்புடையது. ஆதலால் வாதபித்தாத்மகமான ரோகங்களில் இது முக்கிய ஔஷதமாகக் கருதப்படுகிறது.

அம்ல பித்தத்தில் இந்த ரஸமானது சாமக ஔஷதமாகச் சொல்லப்பட்டுள்ளது. அம்ல பித்தத்தில் முதலில் வயிற்று வலியும் பிறகு அம்ல ரஸத்துடன் கூடிய பித்தத்துடன் வாந்தியும் உண்டாகும். வாந்திவந்த பிறகு வயிற்றுவலி கொஞ்சம் குன்றந்திருக்கும், மறுபடியும் கொஞ்சம் நேரம்கழித்து அதிகமான வயிற்றுவலியும், வாந்தியும் உண்டாகும். இதுதான் இந்த ரோகத்தின் முக்கிய லக்ஷணம். வாயுவும், பித்தமும் இரண்டும் ஆமாசயம் க்ரஹணீபாகம் இரண்டிலும் அதிகமாவதால் முன்சொன்ன முக்கியமான இரண்டு லக்ஷணங்களும் உண்டாகின்றன. அதேவாயு பித்தம் இரண்டும் பக்வாசயத்தில் அதிகமானால், பித்தத்தின் அம்லத்தின்ஸ்தானத்தில் ஜலாம்சம் அதிகமாகி வயிற்றுவலியுடன் அதிஸாரத்தை உண்டாக்கும். இல்லாவிடில் வாயுவின் ஆதிக்கத்தால் ஆக்மானம் உண்டாகலாம், பக்வாசயமானது பாசகபித்தம் ஸமானவாயு தாதுரூபவாயு இரண்டின் கார்ய க்ஷேத்ரம், ஆனபடியால், மித்யாஹார விஹாரங்களால் துஷ்டியடைந்த அவ்விரண்டு தோஷங்களும் இயற்கையாகவே சாம்யாவஸ்தையை அடைய முயற்சிக்கின்றன. அப்பொழுதுதான் முன்சொன்ன லக்ஷணங்கள் காணப்படுகின்றன, ஆனால் துஷ்டாவஸ்தையைப் போக்கடிப்பதற்குள்ள ஜீவனீய சக்தியானது போதுமானதாக இல்லாததால், அப்பொழுது ரோகிக்கு அம்லத்தன்மையுடன் வாந்தியும், வேதனையும் உண்டாகிறது ஸூதசேகர ரஸத்தின் த்ரவ்ய ஸமூஹங்களின் பரிணாமங்கள், பித்தத்தின் அம்லத்தன்மையைக் குறைப்பதிலும், ஸமான வாயுவின் ஸமனாவஸ்தையைச் செய்வதிலும் முக்கியமாகக் காணப்படுவதால் அம்லபித்தம் என்ற ரோகத்தில் இந்த ரஸமானது மிகவும் நன்மைதரக்கூடியதெனக் கருதப்படுகிறது அந்தந்த ஸ்தானங்களிலுள்ள, விருத்தியடைந்த தோஷங்களை ஸாம்யா வஸ்தையில் நிலைநிறுத்துவதே இந்த ரஸத்தின் விசேஷ கார்யம்.

ஸூதசேகர ரஸமானது, சாமக ஔஷதமாக இருப்பதால் ஹ்ருத்யமானதாகவும் கருதப்படுகிறது. ஸன்னிபாதம், மற்ற ஸாங்க்ராமிகஜ்வரம் இவைகளில் ஹ்ருதயத்தின் கார்யம் மிகவும் வேகமாக நடக்கும்.

இதற்கு காரணம் யாதெனில், ரக்தத்தில் ப்ரவேசித்துள்ள விஷாம்சத்தைப் போக்கடிப்பதற்கோ அல்லது அதைத் தடுப்பதற்கோ வேண்டி. ரக்த ஸஞ்சாரம் அதிக வேகமாக ஏற்படுகிறது. ஹ்ருதயத்தின் சுருங்கும் விரியும் தன்மை வேகமாகவும், அதிகமாகவும் இருந்தால்தான் ரக்த ஸஞ்சாரமும் வேகமாக இருக்கும். ஆதலால் ஹ்ருதயமும், ரக்த வாஹினிகளும் அதிக கார்யம் செய்ய வேண்டியிருப்பதால் ஹ்ருதயத்திற்கும் பலஹீனம் ஏற்படுவதுடன், ரோகியும் களைத்து ஒரு கார்யத்திலும் விருப்பம் இல்லாதவனாக ஆகிவிடுகிறான். இதை இவ்விதமாகவே அஜாக்கிரதையாக கவனிக்காமல் இருந்தால் Heart weakness உண்டாகி ரோகி நித்யரோகியாகக் கூடும். ஆதலால் இந்த நிலைமை வரும் முன் ஒவ்வொரு வைத்யரும், முதலில் ஹ்ருதயத்தை ரக்ஷிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். தீக்ஷ்ணமான உத்தேஜக ஔஷதங்களைக் கொடுத்து ஹ்ருதயத்தை ரக்ஷிக்கவும் முற்படுவது ஹ்ருதயத்தைக் கெடுப்பதாகத்தான் கருதப்படும். தீக்ஷ்ணமான உத்தேஜக ஔஷதங்களால் ஹ்ருதயத்தின் கதி வேகமாவதுடன், சீக்ரமாக Heart weakness என்ற நிலைமையும் வந்து விடும். ஹ்ருதயத்தில் உண்டாகும் அந்த அவஸ்தையானது வாத பித்தத்தால் உண்டானது எனப் பெரியோர்கள் கருத்து, இந்நிலைமையில் ஹ்ருதய ரக்ஷகமாக ஸூதசேகர ரஸம் கொடுக்கப்பட்டு நல்ல பலனும் கிட்டியுள்ளது, ஆதலால்தான் ஹ்ருத்யமான ஔஷதங்களுக்குள் இந்த ரஸத்தை முதன்மையாக நம் பெரியோர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர் போலும்.

ஸான்னிபாதிக ஜ்வரங்களில், விசேஷமாக ஆந்த்ரிக ஸன்னிபாதத்தில் இந்த ரஸமானது ஸாதாரணமாக உபயோகப்படுத்தப்படுகிறது. இவ்வியாதியில் ரக்தத்தில் கீடாணுக்களின் விஷாம்சத்தாலும், தோஷப்ரகோபங்களாலும், ரக்த ஸஞ்சார கர்மா அதிகமாக இருப்பதால் சாபகமாக இந்த ரஸம் கொடுக்கப்படுகிறது. ஆந்த்ரிக ஸன்னிபாதத்தில் பித்தப்ரகோபம் அதிகமாகி, அதிக தாஹம், வரட்டு இருமல் போன்ற உபத்ரவங்கள் உண்டானால் ப்ரவாளபிஷ்டி போன்ற ஔஷதங்களுடன் சேர்த்து கொடுக்க பித்தோபத்ரவங்கள் உடனே சமனம் அடைகின்றன.

மித்யாஹார விஹாரங்களால் ஆமாசயத்திலுள்ள ச்லேஷ்மிக கலா கொஞ்சம் ரோகத்தையடைந்து, பிறகு அங்கு வ்ரணம் உண்டாகிறது. உட்கொள்ளும் ஆஹாரம் ஆமாசயத்தில் சென்று நன்றாக ஆமாசய ரஸத்துடன் கலக்காமலும், வ்ரணத்தில்படும் சமயம் வலியும் உண்டாக ஆரம்பிக்கிறது. ஆமாசயத்திலேயே ஆஹாரம் தங்கி கெடுதலையும் அடைய ஆரம்பிக்கிறது. பிறகு வாந்திவரும் சமயம் கெடுதலடைந்த ஆஹாரமும் வெளிவரும். அப்பொழுது வலி கொஞ்சம் குறைந்திருக்கும், இதை அன்னத்ரவசூலம்



எனக் கூறுகின்றனர் நம் பெரியோர். இதில் முக்கியமான சிகித்சை என்னவெனில் ஆமாசயத்தில் உண்டான வ்ரணத்தை ரோபணம் செய்வதே, இவ்விதம் ரோபணம் செய்வதில் ஸூதசேகர ரஸம் மிகவும் உபயோகமாக இருக்கிறதென சொல்ல வேண்டியதில்லை. இவ்விதமே அக்னியாசயத்தில் உண்டாகிற ஆக்னேய ரஸத்தின் கோளாறுகளாலுண்டான சூலத்தைக் குறைப்பதிலும் இந்த ரஸத்தை உபயோகிக்கலாம்

வாதாதிஸாரம், பித்தாதிஸாரம் இரண்டிலும் இந்த ஔஷதத்தை கொடுக்கலாம். விதாஹியான போஜனத்தாலும், ஆமாஸஞ்சயத்தாலும் அதிஸாரமானது உண்டாகிறது உட்கொண்ட ஆகாரம் நன்றாக பசிக்கப்படாமல் இருக்கும். யக்ருத்திலிருந்து உண்டாகிற பித்தம் ஆஹாரத்துடன் நன்றாகக் கலக்காமல் (அந்த்ரம்) குடலையடைந்து அங்கு விதாஹத்தையடைகிறது. அன்ன ரஸத்தின் சோஷணமும் குடலில் நன்றாக ஏற்படுகிறதில்லை. ஆதலால் அன்ன ரஸமானது குடலிலேயே தங்கி அத்தாது அதிகரித்து அதிஸாரம் உண்டாகி, விதக்தாஹாரத்தின் ச்ராவமும் உண்டாகிறது. பித்தாதிஸாரத்தில் பித்தத்தின் த்ரவத்தன்மையும், ஸாந்த்ரத்தன்மையும் அதிகமாகி அதிஸாரத்தை உண்டு பண்ணுகிறது. இவைகளில் இந்த ரஸம் உபயோகிப்பதால், பித்தத்தின் த்ரவாம்சத்தைக் குறைத்து வேண்டிய அளவு செய்து அதிஸாரத்தையும் நிறுத்துகிறது.

உதாவர்த்தம் என்ற ரோகமானது வாத விக்ருதியால் ஏற்படுகிறது. இந்த ரோகத்தில் விசேஷமாக அபானவாயு, ஸமான வாயு, இரண்டின் கோபந்தான் ஏற்படுகிறது. முக்கியமாக அபானம் நன்றாக வெளிச்செல்லாததால் ஆந்த்ரத்தின் கார்யங்கள்ப்ரதிலோமமாக ஆரம்பிக்கின்றன. பிறகு ஆந்த்ரம் உப்புசத்தையடைந்து வயறு வாயுவினால் நிறைந்த பலூன்போல் உப்ப ஆரம்பிக்கிறது. வயிற்றில் வலி, மூத்ர ரோதம், மூச்சுத் தட்டல், மலபந்தம் முதலியவைகள் உண்டாக ஆரம்பிக்கின்றன. அப்பொழுது இந்த ரஸத்தைத் தகுந்த அனுபானங்களுடன் கொடுக்க வாயுவானது அனுலோமமாக வெளிக்கிளம்பி மற்ற உபத்ரவங்களும் சமனத்தையடைகின்றன; மலமும் சரிவர வெளிவர ஆரம்பிக்கும். இந்த ஔஷதமானது வாயுவை சமனம் செய்து அனுலோமத்தை செய்யுமேயல்லாது விரேசனம் செய்யும் சக்தி வாய்ந்ததல்ல என்று அறியவேண்டும்.

சுருக்கமாக ஸூதசேகர ரஸம், யோகவாஹியாகவும், கீடாணுக்களில் உண்டான விஷாம்சத்தை நீக்கக்கூடியதாகவும், ஹ்ருதயத்திற்கு பலத்தைக் கொடுக்கக்கூடியதாகவும், வாயு, பித்தம் இரண்டையும் சமனம் செய்யக்கூடியதாகவும் கூறப்படுகிறது.

இந்த ரஸம் ஆமாசயம், பக்வாசயம், பெருங்குடல், யக்ருத்து, அக்னியாசயம், ப்ளீஹை, வாதவாஹினி நாடிகள் இவைகளில் தன் கார்யத்தை செய்யும் இயல்புடையது என வ்ருத்த வைத்யர்களின் கருத்து.

**मधुरज्वरान्तकक्वाथः**- ரக்தசந்தனம், விளாமிச்சம்வேர், கொத்தமல்லி விதை, பர்படகப்புல், கோரைக்கிழங்கு, சுக்கு, வெட்டிவேர், ஆகியவைகளை ஸம பாகமாக எடுத்து கஷாய முறைப்படி க்வாதம் செய்யவும்.

உபயோகம்:- இது பாசகமாகவும், தோஷங்களால் உண்டான விஷாம்சத்தைப் போக்கடிக்கக் கூடியதாகவும், சாமகமாகவும் உள்ளது. லக்ஷ்மீநாராயண ரஸத்துடன் அநுபானமாகக் கொடுக்க ஆந்த்ரிக ஜ்வரம் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பிக்கும்.

(a) வாயுகோபம் அதிகமாகி, அதிக பேத்தல் இருந்தால்:— மஹாவாத வித்வம்ஸன ரஸத்தை கரிசலாங்கண்ணி அல்லது துளசி இவைகளின் சாற்றுடன் கொடுக்கவும்.

**महावातविध्वंसन रसः**- சுத்த பாரதம், சுத்த கந்தகம், நாக பஸ்மம், வங்க பஸ்மம், லோஹ பஸ்மம், தாம்ர பஸ்மம், அப்ரக பஸ்மம், திப்பலி, வருத்த படிக்காரம், மிளகு, சுக்கு இந்த 11 த்ரவ்யங்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தோலா சுத்த வத்ஸநாபி 4 தோலா முதலில் சுத்த ரஸத்தையும், சுத்த கந்தகத்தையும் சேர்த்து அரைத்து பிறகு ஒவ்வொரு பஸ்மத்தையும் சேர்த்து நன்றாகக் கல்வத்தில் அரைக்க வேண்டும். பிப்பலி முதலான நான்கு சாமான்களையும் நன்றாக இடித்து வஸ்த்ரகாளனம் செய்து, முன் அரைத்து வைத்த மருந்துகளுடன் சேர்த்து அரைத்து, த்ரிகடுகஷாயம், த்ரிபலை கஷாயம், கொடிவேலி கஷாயம், கரிசலாங்கண்ணிச்சாறு, கருநொச்சி இலைச்சாறு எருக்கம் பால், நெல்லிச்சாறு, இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் மூன்று பாவனைகள் செய்து ஒவ்வொரு ரத்தி வீதம் மாத்திரைகள் உருட்டவும்.

அளவு:- 1 மாத்திரையிலிருந்து இரண்டு மாத்திரைகள் தினம் 3 வேளை கடுமையான வாத ரோகங்களில் இஞ்சிச் சாற்றிலாவது அல்லது கரிசலாங்கண்ணிச் சாற்றிலாவது, அல்லது தேனுடன் கொடுக்கவும். ஆமவாதத்தில் வெளக்கெண்ணெ அல்லது நெய்யுடன் கொடுக்கவேண்டும்.

உபயோகம்:- இந்த ரஸமானது வாதவ்யாதி, சூலம், கிரஹணி, ஸன்னிபாதஜ்வரம், அபஸ்மாரம், மந்தாக்னி, உடல் சில்லிட்டுப்போதல், ப்ளீஹவ்ருத்தி, குஷ்டம், அர்சஸ், ஸ்திரீ



களின் கர்பாசயத்தின் விக்ருதியால் உண்டான ரோகங்கள் ஆகியவைகளை நாசம் செய்யும். கேவலம் வாத கோபத்தால் தலைவலி உண்டானால் அது பொறுக்க முடியாமல் இருக்கும். அச்சமயம், ரோகி இன்னது செய்ய வேண்டுமென்றே அறிய மாட்டான், உடலில் முளையை வைத்து அடிப்பதுபோல் வலி, விசேஷமாக வலது புறத்து நெற்றியில் வலி அதிகரித்தல், கொஞ்ச நேரம் நின்று மறுபடியும் தாங்க முடியாத வலி உண்டாகுதல் ஆகியவைகள் வாதப்ர கோபத்தால் உண்டான தலைவலியின் லக்ஷணங்கள் இந்த ரோகத்தில் இந்த மருந்தைக் கொடுத்த உடனே வலி நிற்பதுடன் பிறகும் இந்த தலைவலியே வராதெனலாம்.

ப்ரஸவித்த ஸ்திரீகளுக்கு ஜ்வரம் இல்லாவிடினும் மக்கல்ல சூலம் என்ற கர்பாசய சம்பந்தமான ரோகம் உண்டாகலாம். இதில் தாங்க முடியாத வலி மூத்ராசயம், குடல், கர்பாசயம் இவைகளில் பொருக்க முடியாத வேதனை, வலி கர்ப்பாசயத்திலிருந்து மூத்ராசயம், வயறு இவைகளில் க்ரமமாக பரவுதல் முதலிய லக்ஷணங்கள் காணப்படும். இதில் இந்த ரஸமானது மிகவும் பலன் தரக்கூடியதாகச் சொல்லப்படுகிறது ஆந்த்ரிக ஸன்னிபாதம், க்ரந்திக ஸன்னிபாதம். (Plague) அதிக பேத்தல், சித்த விப்ரமம், நாக்கு வரண்டும், முள்போலும் இருத்தல், ஆகிய வாதப்ரகோபத்தால் உண்டான இந்த ரஸத்திற்கு ஸமானமாக, நிச்சயமாக நல்ல குணத்தைக் கொடுக்கக்கூடிய வேறு ஔஷதங்களில்லையெனவே சொல்லலாம்.

க்ருத்ரஸீ (Sciatica) என்ற ரோகத்தின் ஆரம்பத்தில் ரோகிக்கு கைகால்கள் ஓச்சலும், நடக்கும் சமயம் கால் நரம்புகள் விறைப்பாகவும் வலியுடனும் இருக்கும். பிறகு இடுப்பிலும், முழங்காலின் பின்புறமும் பொறுக்க முடியாத வலி உண்டாகும். தூக்கம் சிறிதளவும் இருக்காதெனலாம் இந்த வ்யாதியில் சில ரோகிகளுக்கு ஜ்வரம் வரக்கூடும். தேஹோஷ்ண நிலை 102° யிலிருந்து 105° வரை அதிகரித்துச் செல்லும் பிறகு வாந்தி, தலைவலி மார்வலி முதலிய லக்ஷணங்கள் உண்டாகும். இந்தநிலைமையில் மஹாவாத வித்வம்ஸன ரஸம் ½ ரத்தீ, கரிசலாங்கண்ணிச்சாறு 1 அவுன்ஸ், தேன் 1/16 ஸ்பூன் சேர்த்து ஒரு நாளில் மூன்று அல்லது நான்கு தடவை கொடுக்கவேண்டும், பிறகு யோக ரத்னாகரத்தில் சொல்லியுள்ள லகு விஷ கர்ப தைலம், டர்பன்டைன், கர்பூர தைலம் இவைகளை ஸமபாகமாகக் கலந்து நோயுள்ள இடத்தில் சூடு வரத்தேய்க்க ரோகமானது நிச்சயமாய் நிவர்த்தியாகுமெனச் சொல்லவும் வேண்டியதில்லை,

(b) ஆந்திரிக ஸன்னிபாதத்தில் உபத்ரவ ரூபமாக வறட்டு இருமல் வந்தால்:- பர்படாதிக்வாதம் கொடுக்கலாம், அல்லது

ப்ரவாளபிஷ்டீ ஸிதோபலாதிசூர்ணம் இரண்டையும் நெய், தேன் கலந்து இரண்டுவேளை கொடுக்கவேண்டும்

(*c*) புப்புஸத்தில் ரோதம்உண்டாகி வலி உண்டாகும் :- லக்ஷ்மீ விலாஸ ரஸம், ச்ருங்கபஸ்மம், ஸிதோபலாதி சூர்ணம் இவைகளைத்தேன்கலந்து தினம் மூன்றுவேளை கொடுக்கவேண்டும்.

(*d*) மூக்கு, வாய், ஆஸனத்வாரம் இவைகள் வழி ரக்தப் பெருக்கு உண்டானால்:- ப்ரவாளபிஷ்டீ 2-2 ரத்தி, குடூசீஸத்வம் 2-2 ரத்தி, மஞ்சள்பொடி 1-1 ரத்தி இவைகளைக்கலந்து தேனுடன் இரண்டுவேளை கொடுக்கவேண்டும்.

(*e*) ப்ராரம்பத்தில் மலபந்தம் இருந்தால்:- க்ளிஸரின் இனிமா கொடுக்கலாம், அதிக அவசரம் ஏற்பட்டால் விளக்கெண்ணை 5-10 தோலா காய்ச்சி ஆறின பசும்பால் 1-சேர் இரண்டையும் நன்றாகக்கலந்து பஸ்திசெய்து மலத்தை வெளிவரச் செய்ய வேண்டும்.

(*f*) அதிகமான தாஹம் இருந்தால் :- ஷடங்கபானீயம் கொடுத்துவரவேண்டும் षडंगपानीयम्:- கோரைக்கிழங்கு, பர்படகப்புல்; விலாமிச்சம்; ரக்தசந்தனம்; வெட்டிவேர்; சுக்கு; ஆகிய 6 சாமான்களையும் ஸமமாகச் சேர்த்து இடித்து சூர்ணம் செய்யவும். பிறகு 1 தோலா சூர்ணத்தை 128 தோலா ஜலத்தில் போட்டு ஜலம் பாதியாகும் வரை நன்றாகக் கொதிக்க வைக்கவேண்டும். கொதிக்கும் சமயம் பாத்திரத்தை மற்ற பாத்திரத்தால் மூட வேண்டும். பாதியாகச் சுண்டினவுடன் கீழ் இறக்கி தானாகவே ஆறின பிறகு கொஞ்சம் கொஞ்சமாக, தாஹம் வரும் சமயம் ரோகிக்கு கொடுக்கலாம்.

உபயோகம் :- இந்த ஜலம் விசேஷமாக எல்லா பித்த ஜ்வரங்களில் கொடுக்கப்படுகிறது. இதை அருந்துவதால் ரக்தத்தில் சேர்ந்துள்ள விஷாம்சமானது கடங்கலில்லாமல் மூத்ரத்துடன் வெளி வர ஆரம்பிக்கும். காலையில் கொதிக்க வைத்த ஜலத்தை மாலை வரையிலும், மாலை கொதிக்க வைத்த ஜலத்தை மறுநாள் காலை வரையிலும் உபயோகிக்கலாம்.

(*g*) வயருப்புசம் மற்ற வாதோபத்ரவங்கள் இருந்தால் :— யோகராஜகுக்குலுவை ராஸ்னாதி க்வாதத்துடன் சேர்த்து காலை மாலை இரு வேளை கொடுக்கலாம்.

(*h*) பலஹீனம், ப்ளீஹை, யக்ருத்து இவைகளின் வீக்கம் (Livor and Spleen Enlargomont) ரக்த க்ஷயம் ஆகியவைகள் இருந்தால் :—அப்ரக பஸ்மம், லோஹ பஸ்மம் இரண்டையும்



ஒரு மாதம் த்ரிபலா சூர்ணத்துடன் தேன் கலந்து கொடுக்க வேண்டும்.

(*i*) தூக்கமின்மை அதிகமிருந்தால் :- ஸூதசேகர ரஸம் 1 ரத்தி அல்லது ப்ரவாள பிஷ்டீ 2 ரத்தி வீதம் சுக்கு, நெல்லி, தேன் இவைகளுடன் கலந்து தினம் மூன்று வேளை கொடுக்கவும். அல்லது தலை உச்சியில் சீதளமான லேபனம் போடலாம்

(*j*) (क) ஹ்ருதயமானது பலஹீனமாகக் காணப்பட்டால்:— பூர்ண சந்த்ரோதய ரஸம் ¼ ரத்தி வீதம் நெய்யில் கலந்து இரண்டு வேளை கொடுக்கவும்.

(ख) ஸூதசேகர ரஸத்தை துளசிச்சாறு சர்க்கரை இவைகளுடன் கலந்து காலை, மாலை இருவேளை கொடுக்கலாம்.

(ग) த்ராக்ஷாஸவம் ஒவ்வொரு அவுன்ஸ் வீதம் காலை, மாலை கொடுத்துவர ஹ்ருதயம் பலமாவதுடன், தூக்கமும் கொஞ்சம் வரக்கூடும்

(*k*) மூத்ரம் வெளிவரும் சமயம் எரிச்சல் இருந்தால் :—கர்பூர சிலாஜதுவை 4 யவம் ப்ரகாரம் பாலுடன் காலை, மாலை இரு வேளை கலந்து கொடுக்க உடனே எரிச்சல் சமனமடையும். அல்லது உசீராஸவம்½ அவுன்ஸ் ஜலம் ½ அவுன்ஸ் சேர்த்து தினம் இருவேளை கொடுக்கவேண்டும்.

(*l*) கபவ்ருத்தியுண்டாகி பயங்கர கபோபத்ரவங்கள் உண்டானால் :—அப்ரக பஸ்மம், ச்ருங்க பஸ்மம், இவைகளைத் தேனுடன் கலந்து கொடுக்கவும்

(*m*) கைகால்கள் சில்லிபபையடைதல், உடல் நடுக்கம். ஹனுஸ்தம்பம்:- இவைகளில் யோகராஜ குக்குலுவை ராஸ்னாதி க்வாதத்துடன் சேர்த்து கொடுக்கவும்

(*n*) அதிஸாரம் பயங்கரமாக நாளுக்கு நாள் அதிகரித்தால் :- ஸூதசேகர ரஸம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், ப்ரவாள பிஷ்டீ இம்மூன்றும் ஒவ்வொரு ரத்தி வீதம் சேர்த்து ஒரு மாஷம் லகு கங்காதர சூர்ணத்துடன் கலந்து தேனுடன் தினம் மூன்று வேளை கொடுத்து வர உடன் அதிஸாரம் நின்றுவிடும்

स्वर्णमाक्षिक भस्म :— சுத்தமான ஸ்வர்ணமாக்ஷிகத்தை கொள்ளு கஷாயத் (कुलथक्वाथ) துடன் 12 மணிநேரம் அரைத்து வில்லை கட்டி வெய்யிலில் உலர்த்த வேண்டும் பிறகு அகலில்

வைத்து மூடி சீலை மண் செய்து கஜபுடம் செய்யவேண்டும் இவ்விதம் விளக்கெண்ணை, ஆட்டு மூத்திரம் இவைகளில் க்ரமமாக அரைத்து வில்லை தட்டி வெய்யிலுலர்த்தி கஜபுடம் செய்ய வேண்டும். இந்த பஸ்மத்தை ஆட்டு மூத்திரத்தில் 3 தடவை அரைத்து 3 தடவை கஜபுடம் செய்தால் பஸ்மமானது விசேஷ பலனைக் கொடுக்கக்கூடியதாக ஆகும்.

கவனிக்க வேண்டியது — புடம் செய்த பிறகும் பஸ்மத்தை சூர்ய வெளிச்சத்தில் நன்றாகக் கவனித்தால் பளபளப்பிருந்தால், புடம் செய்தது போராதென தெரிந்து கொள்ளவேண்டும். நூதன ஜ்வரத்திலும், தீவ்ர ஜ்வரத்திலும் இந்த பஸ்மத்தைக் கொடுக்கக் கூடாதென பெரியோர்களின் கருத்து. இந்த பஸ்மத்தை ஸேவிக்கும் சமயம். ரோகி, அம்ல விபாகமாகக்கூடிய பதார்த்தங்கள், புளி மாம்ஸம், கொள்ளு புதிய அரிசி, விதாஹகாமான ஆஹாரங்கள் ஆகியவைகளை உட்கொள்ளக்கூடாது.

அளவு — 1-லிருந்து 3 ரத்தீவரை தினம் 3 தட்டவை பசும்பால், தேன், குடூசீஸத்வம், த்ரிபலை சர்க்கரை அல்லது ரோகங்களை அனுசரித்து மற்ற அனுபானங்களுடன் கொடுக்கலாம்.

அனுபானம் :— பாண்டு, ஹலீமகம், காமாலை ... தேன், திப்பலி, முள்ளங்கிச்சாறு. (2) ஸ்வப்ன தோஷம், ஜீர்ணஜ்வரம், பித்த ப்ரமேகம், மூத்ர க்ருச்ரம் — தேன், சர்க்கரை. (3) வாந்தி — ஜீரா, தேன். சர்க்கரை. (4) தூக்கமின்மை — சுக்கு, நெல்லிச்சாறு (5) குஷ்டம், பாண்டு, ப்ரமேஹம், க்ஷயம், — பசும்பால்,

உபயோகம் :— ஸ்வர்ணமாக்ஷிகம், லோஹத்தின் அம்சம் உடைத்தானதாக இருந்த போதிலும், லோஹத்தைப்போல் தீக்ஷ்ணகுணமுள்ளதல்ல. ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், ஸ்வாது, திக்தரஸம் உள்ளது வ்ருஷ்யம், ரஸாயனம், யோகவாஹீ சாமகம், சக்திவர்த்தகம், சீதவீர்யம், ஸ்தம்பகம் ரக்த ப்ரசாதகம், ஆகிய குணங்களை உடையதாக இருக்கிறது ரக்த ப்ரசாதக குணமிருப்பதால், இந்த பஸ்மத்தை ஸேவிப்பதால், ரக்தாணுக்கள் சக்தியுள்ளதாக ஆவதுடன் ரக்தமும் சுத்தமாக மாறுகிறது. இந்த பஸ்மமானது மிகவும் ஸௌம்ய குணம் உடையதால், ஸுகுமார சரீரம் படைத்த குழந்தை, ஸ்திரீ ஆகியவர்களுக்கும் பயமில்லாமல் இதைக் கொடுக்கலாம். Tonsils, Salivar Glands முதலியவைகளில் ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டாலும் இதைக்கொடுக்க நல்ல ப்ரயோஜனமுண்டு. சீத ஜ்வரத்தில் அநேக நாட்கள் க்வினைனை ஸேவித்து அதினால் ப்லீஹா விருத்தியடைந்து (Spleen Enlargement) வயிறு வீங்கி,



உடலில் வீக்கம் உண்டாகி, பயம், வாந்தி முதலியவைகள் உண்டானால் அப்பொழுது இந்த பஸ்மத்தைக் கொடுக்கவும். க்வினையினின் கெடுதலை (Reaction) சமனம் செய்யும் சக்தி இந்த பஸ்மத்திற்கு உண்டு என பரிசயமுள்ள விருத்த வைத்தியர்களின் அபிப்ராயம் அனுபவமும். க்வினையினை அதிகமாகக் கொடுப்பதாலும், உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாமலிருப்பதாலும், தூக்கமின்மை, செவிட்டுத்தன்மை, கண் எரிச்சல். யக்ருத்தின் கோளாறுகள், மூத்திரத்தில் அதிகமான மஞ்சள் நிறம் காணுதல் மூத்திரம் வெளிவரும் சமயம் எரிச்சல் ஆகியவைகள் உண்டாகின்றன இவைகளை நாசம் செய்வதற்கு ஸ்வர்ணமாக்ஷிகபஸ்மம் கொடுக்கப்படுகிறது. இதை அம்மருந்தின் ப்ரபாவம் என்றும் சொல்லுகின்றனர்.

ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மமானது, பாசக ரஞ்சக பித்தங்களின் விகாரங்களிலும், ரஸம், ரக்தம், மஜ்ஜா, சுக்ரம் ஆகிய தாதுக்களின் விகாரங்களிலும்; கண், ஹ்ருதயம், ஆமாசயம், யக்ருத்து, குடல், மூத்ராசயம், Ductless. Glands. அண்டகோஷம் ஆகிய இடங்களிலும் தன் குணத்தைச் செய்து ரோகங்களை சமனம் செய்யும் இயல்புடையது. ஆந்த்ரிக ஜ்வரத்தில் ஜ்வரம் குறைந்தபிறகு சக்தி உண்டாவதற்கு லக்ஷ்மீ விலாஸரஸம் தேனுடன் தினம் காலை மாலை இருவேளையும் கொடுத்துவர வேண்டும்.

ஜீர்ண ஸன்னிபாதத்தில்: தகுந்த சிகித்சை செய்யாமல் 21 நாட்களுக்கு மேலும் ஜ்வரம் நீடித்து வந்தால் லக்ஷ்மீநாராயண ரஸத்தை அமிர்தாரிஷ்டத்துடன் சேர்த்து கொடுக்கவேண்டும் அல்லது ஸூதசேகர ரஸம் கொடுக்கலாம் ரோகி இருக்கும் அறையை சுத்தக்காற்றுள்ளதாகச் செய்வதற்கு தினம் மாலை அபராஜித தூபம் என்பதால் புகை போடவேண்டும்.

अपराजित धूप :— குக்குலு வேப்பம்பட்டை, வத்சநாபி, கடுக்காய், துளசி இவைகளை இடித்து நெய்கலந்து தூபம்போடவும். இவ்விதமாக ஸன்னிபாத ஜ்வரத்தை சிகித்சை செய்வதிலும் அதிக பயமும் கஷ்டமும் இருப்பதால்தான் அதிக சிரத்தையுடன் சிகித்சை செய்யவேண்டும் என்று நம் முன்னோர்கள் அநேகம் தடவை வற்புறுத்துகின்றனர். சுபம்.

S. Panchanadan, Trichy.

# நேத்ர ப்ரகாசிகை.

( G. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தஞ்சாவூர். )

## குளிகாப்ரகரணம்.

11. சந்த்ரோதய குளிகை:— கடுக்காய், வசம்பு, கோஷ்டம், திப்பிலி, மிளகு, மஞ்சள், தான்றிப்பருப்பு, சங்கு, மனோசிலை, இவற்றை சம எடையாக எடுத்து, ஆட்டுப்பால் விட்டரைத்து மாத்திரைகளாக உருட்டி, எள்ளளவு ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட காசம், திமிரம், அரிப்பு, படலம்; விரணம், நிசாந்தம், நாட்பட்ட புஷ்பம் இவைகள் குணப்படும்

12. சந்தனாதி குளிகை:— சந்தனம், பச்சைக்கர்ப்பூரம், சதாவரீ, தாத்தம், ஜாதிப்பூ, செங்கழுநீர்ப்பூ, பூர்காவி, கொம்பரக்கு, அதிமதுரம், கோரோசனை, குங்குமப்பூ எல்லாம் சம எடையாகக் கூட்டி நந்தியாவட்டப்பூச் சாற்றாலரைத்துக் காய்ந்த பிறகு பன்னீர்விட்டரைத்துக் குளிகைகள் செய்யவும் ஸ்தன்யப் பாலில் உரைத்துக் கண்ணிலிட, எரிச்சல், சோஷம், தூமம், விரணம், அரிப்பு, சிகப்பு, பித்தம் நீங்கும் இது ராஜயோக்ய மான மருந்து.

13. கர்ப்பூராதி குளிகை.— பச்சக்கர்ப்பூரம், அதிமதுரம், ஜடாமாம்ஸீ, பீதரோகிணி, கோஷ்டம், தாமரை, திருவட்டம், பிசின், தாக்கம், கந்தவேணீ, (ருத்தாரி) இவை சமனெடை (வகைக்கு 2 நிஷ்கம்) யாகச் சேர்த்து நந்தியாவட்டைப்பூச் சாற்று லரைத்துக் காய்ந்தபிறகு பன்னீர்விட்டரைத்துக் குளிகைகள் செய்து, ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட எரிச்சல், விரணம், அரிப்பு, சோஷம், தூமம், ஸ்ராவம், லோஹிதம், பித்த விருத்தி குணமாகும்

14. மஹா கண்டு:— நாகணம், குங்குமப்பூ, பீதரோகிணி புனுகு, தாக்கம், ஜடாமாம்ஸீ, அதிமதுரம், கோஷ்டம், சந்தனம், வெட்டிவேர், செங்கழுநீர் தாமரை, தாமரைத்தண்டு, கோரோசனை சிறுகீரை, தங்கம், வெள்ளி, அஞ்சனக்கல், பவழக்கொடி, சங்கு, படிக்காரம், தேற்றாங்கொட்டை, மரமஞ்சள், செண்பகப்பூ, :இவை சமம் இவற்றை நந்தியாவட்டப் புஷ்பம், பன்னீர், ஜாதிப்பூ, காட்டு மல்லிகை, சத்பல புஷ்பம் இவை ஒவ்வொன்றின் சாற்றிலும் தனித்தனியாகவரைத்து மாத்திரை செய்து. ஸ்தன்யப்பால் பன்னீர் இவற்றில் உரைத்துக் கண்ணிலிட எரிச்சல், சோஷம், அரிப்பு, குரூணம், சிகப்பு, பூயஸ்ராவம், காசம், தூமம், திமிரம் இவைகள் தீரும்.

15 கருடாஞ்சனம்:— ரசம், வெங்காரம், நாகம், தாம்பரம் இத்தாப்பு, கடல்நுரை, அதிமதுரம், தேற்றாங்கொட்டை, தாத்தம்,



திரிகடு, திரிபலை, அஞ்சனக்கல், மனோசிலை, படிக்காரம், கர்ப்பூரம், பீதரோகிணி, இலந்தை சம எடையாகக்கூட்டி, புங்கம்வேர்ச் சாற்றாலரைத்து மாத்திரை செய்து, ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட 96 வித நயன ரோகங்களும் நீங்கும். கருடதிருஷ்டி போல் பார்வை உண்டாகும்.

16 மஹா ரத்நாதி குளிகை:— மாணிக்கம், இந்த்ரநீலம், மரகதம், முத்து, பவழம், புஷ்யராகம், கோமேதகம், வஜ்ரம், வைடூர்யம், ஸ்படிகம், சந்த்ரகாந்தம், சூர்யகாந்தம், ரஜாவர்த்தம், கருடமணி, சுண்ணாம்புக்கல், ஸ்வர்ணமாக்ஷிகம், காந்தம், லோஹம் வைக்ராந்தம், ஸஹஸ்ரவேதி, விமலை, மனோசிலை, பூங்காவி, அஞ்சனக்கல், ஸ்வர்ணம், வெள்ளி, வெங்கலம், நாகம், பித்தளை, தாத்தம், கோழிமுட்டை ஓடு, தாம்பரம், ரஸம், வங்கம், தாளகம், கருடமணி, பச்சக்கர்ப்பூரம், கடல்நுரை, சங்கு, சோழி, காவிக் கல், சிலாஜது, கல்மதம், நாபி, தேவதாரு, கோஷ்டம், அதிமதுரம் திரிகடு, திரிபலை, சீந்தில், கூழாங்கல், மஞ்சிஷ்டி, ஸமுத்திராப்பழம் ஜடாமாம்ஸீ, சிற்றேலம், பேரேலம், மஞ்சள், மரமஞ்சள், பச்சக் கற்பூரம், கஸ்தூரி, குங்குமப்பூ ஜவ்வாது, புனுகு, கிருஷ்ணாகர், சந்தனம்; யானை, புலி, பன்றி, ஒட்டகம், நாய், மான், புள்ளி மான், பசு, கழுதை, கள்ளிக்காக்கை, எருமை, கோழி, சிறுத்தை, முயல், நரி, காக்கை, ஸாரங்கம், காட்டுக்கோழி, மனிதன் இவற் றின் தலை ஓடு, பல், முதுகெலும்பு, நகம், குளம்பு; சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், சிறுபுள்ளடி, மூக்கரட்டை, முன்னை, தாமரைக்கிழங்கு, பெருந்தும்மட்டி, புறமாப்பட்டை, செறுப்படி, குதிரைவாலி, வெள்ளைக்குன்றி, இருவித நந்தியா வட்டை, ஆவில்பட்டை இவைகள் வகைக்கு 1 நிஷ்கம் வீதம் சேர்த்து; ஸூக்ஷ்ம சூர்ணம் செய்யவும் பிறகு எலுமிச்சை, புளி, பனை, உப்புஜலம், புளிப்பு ஜலம், கையாந்தகரை, பெருந் தும்மட்டி, நந்தியாவட்டை, விலாமிச்சை, சிறுகீரை, நெல்லி, ஜாதி முருங்கை, புங்கு, தாமரை, வெட்டிவேர் நீலோத்பலம், தாய்ப்பால், இவை ஒவ்வொன்றிலும் இரண்டு நாள் அரைத்து மருந்தை எடுத்து ஒரு தாம்பர பாத்திரத்தில் லேபனம் செய்யவும் பிறகு எடுத்துத் தாய்ப்பால் விட்டு அரைத்து நிழலில் உலர்த்த வும். மருந்தை எடுத்து மறுபடியும் தாய்ப்பால், ஸௌராஷ்ட்ரி, நந்தியாவட்டை, முருங்கை, தும்மட்டி இவற்றின் ஒவ்வொன்றின் புஷ்பரஸம், விட்டுத் தனித்தனியாக அரைக்கவும். மறுபடியும் பனைமட்டைச்சாறு, சர்க்கரை நார்த்தை, புளியம்பூ கையாந்தகரை சாறு இவை ஒவ்வொன்றின் சாற்றிலும் அரைத்து வர்த்தி செய்யவும். ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட சுக்லம், புத்புதம், புஷ்பம், நீலம், தர்மாமிசம், விரணம், படலம், குந்தம், அர்புதம், சிகப்பு, திமிரம், நக்தாந்தம், தூமம், பில்லம், பூயம், விஸர்ப்பம், கண்டூ, பிடகை, காசம், சூலம், அங்குரம் முதலிய ரோகங்கள் நீங்கும்.

**வைத்தியச் செய்திகள்**

# திருச்சி ஆயுர்வேத ஸபை.

---

**26—11—50** ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு ஸ்ரீ S. M. சுந்தரராஜாசாரியார் தலைமையில் ஷை சபையின் மாதாந்திர கூட்டம் திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் கூடியது. அதுசமயம் கரூர் பண்டிட் ஸ்ரீ P. S. ராமசர்மா "ரக்த பித்தம்" என்பதுபற்றி விரிவான ஓர் உபன்யாசம் செய்தார். உபன்யாசம் நிதானம், ஸம்பராப்தி முதலியது ஸம்ஸ்கிருதத்திலும், சிகித்ஸை தமிழிலும் ரஸமான சர்ச்சையுடன் நடைபெற்றது. அன்று இக் கூட்டத்திற்கு முன் ஷை சபையின் நிர்வாஹ சமிதி கூடி, டிசம்பர் மாதத்தில் சபையின் வருஷாந்திரக்கூட்டத்தை இவ்வருஷம் திருச்சியில் கூட்டுவதாக தீர்மானித்ததுடன், அதற்கு செய்ய வேண்டிய செலவு தொகை, தலைவர், உபன்யாசகர் முதலிய ஏற்பாட்டைக் குறித்தும் தீர்மானித்தது.

## திருச்சி ஆயுர்வேத ஸபை.

### 17-வது ஆண்டு விழா.

---

சென்ற 17—12—50 ஞாயிற்றுக்கிழமை அன்று திருச்சியில் திருச்சி ஆயுர்வேத யூனியன் கட்டிடத்தில் ஸபையின் 17-வது ஆண்டு நிறைவு விழா, வைத்ய சந்திரிகை ஆசிரியர், பண்டித ஸ்ரீ S. நாராயண அய்யங்கார் அவர்களின் சிறப்புற்ற தலைமையில் வெகு விமரிசையாக நடந்தது. ஸ்ரீ T. S. ஈசுவர அய்யர் அவர்களால் தன்வந்தரி பிரார்த்தனை செய்யப்பட்டபின்னர் ஸபையின் தலைவர் ஸ்ரீ S. M. ஸுந்தரராஜாசாரியார் அவர்கள் ஸபாபதியையும், உபன்யாஸகர்களையும், மற்றும் குழுவிலிருந்த அங்கத்தினர்களையும் வரவேற்றபின், காரியதரிசியால் ஸபையின் 16-வது வருஷாந்தர நடவடிக்கை விவரமும், வரவு செலவு, நிதியிருப்பு விவரமும் பற்றிய அறிக்கை படிக்கப்பட்டது. பிறகு 18-வது வருஷத்திய ஸபை நிர்வாகத்திற்காக கீழ்கண்ட அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. ஸ்ரீ பண்டித ஸ்ரீ P. S. ராமசர்மா (கரூர்) —தலைவர்
2. ,, A. ராகவ ராவ் A. L. I. M. (திருச்சி)— உப தலைவர்.
3. ,, S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி ( ,, )—காரியதரிசி.
4. ,, P. G. கணபதி சாஸ்திரி (ஸ்ரீரங்கம்)—அங்கத்தினர்.
5. ,, S. R. V. நாயுடு ,, ,,
6. ,, R. V. ராமய்யர் (கரூர்) ,,
7. ,, V. R. ஸுப்ரமண்ய அய்யர் (திருச்சி) ,,



கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

---

1. ஸமீபத்தில் காலஞ்சென்ற இந்திய யூனியன் உப பிரதம மந்திரி, கனம் ஸர்தார் வல்லபாய் படேல் அவர்கள் திடீரென காலமானதைக் குறித்து இந்த சபை மிகவும் வருந்துகின்றது. அன்னார் நவ இந்தியாவின் ஸ்ருஷ்டியிலும், அதன் பாதுகாப்பிலும், செய்துள்ள மஹத்தான ஈடற்ற ஸேவைகள் மிகவும் பாராட்டத்தகுந்தவையே. அன்னாரின் அகால மரணம் நவ இந்தியாவிற்கு மிகவும் ஹானிகரம் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றது. (இந்த தீர்மானத்தை எல்லா அங்கத்தினர்களும் எழுந்து இரண்டு நிமிடங்கள் வரை மௌனமாக நின்று நிறைவேற்றினர்.)

2. தமிழ் நாட்டில் ஆயுர்வேத வைத்தியர்களின் நலனுக்காக புதிது புதிதாக ஆங்காங்கு தனித்தனி வைத்ய சங்கங்கள் ஏற்படுவதை ஸந்தோஷத்துடன் வரவேற்கின்றது. ஆனால் தமிழ் நாட்டில் இணையில்லாத ஆயுர்வேத ஸேவையை 25 வருஷ காலமாக புரிந்துவரும் தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்துடன் அவைகள் இணைந்து அதற்கு உதவி சங்கங்களாக ஆயுர்வேத ஸேவையைச் செய்யுமாகில், ஆயுர்வேத ஸேவை எளிதில் ஸாத்தியமாகும் என்பதை அச்சங்கங்களுக்கு வற்புறுத்துகின்றது.

3. ஸெண்டிரல் போர்டு ஆப் இந்தியன் மெடிஸினில் பி. வகுப்பில் பதிவு பெற 5–6 வருஷங்களுக்கு முன்னரே பணம் கட்டி மனுசெய்து கொண்டவர்களுக்கு இதுவரை அதுபற்றிய யாதொரு தகவலுமில்லாமல் மனுவை ஒத்துக்கொள்ளாமல் பதிவு செய்ய மறுத்துவரும் சர்க்காரின் செய்கையை பலமாகக் கண்டிக்கின்றது.

4. ஆஸவாரிஷ்ட விஷயமாக எவ்வளவோவிதமான பிரார்த்தனைகள் செய்தும் அவர்கள் ஒன்றும் இவ்விஷயத்தில் கிரியாம்சையில் செய்யவில்லை என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதுடன் இவ்விஷயத்தில் ஏற்பட்டுள்ள தடுப்பை நீக்குவதற்காக எல்லாவித முறைகளையும் கையாள வேண்டுமென்று இச்சபை தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

ஸ்ரீமான் நாராயணய்யங்கார் அவர்கள் தனது ஸபாபதி முன்னுரையில் ஆயுர்வேத தர்சனமும் பஞ்சபூத தத்வங்களும் என்பதைப்பற்றி ஒரு பேருரை நிகழ்த்தினார். ஆயுர்வேத தர்சனம், மற்ற நியாயம், வைசேஷிகம், ஸாங்கியம் முதலிய வைதிக தர்சனங்களுடன் சிற்சில முக்கிய விஷயங்களில் பாகுபாடற்றிருந்தும், ஆயுர்வேத தந்திரத்திற்கென்ற சிற்சில பிரதி தந்திரஸித்தாந்தங்கள் இருப்பதால் அதன் தர்சனம் ஒரு தனிப்பட்ட சிறப்பு பெற்றுள்ளது. இப்பிரதி தந்திர ஸித்தாந்தங்கள் மற்ற தர்சனங்களுக்கு விரோதமாகவே தோற்றும் என்பதைக் குறிப்பிட்டு பஞ்சபூத தத்வ விமர்சனத்துடன் அவை சிகித்ஸையில் உபயோகப்படும் விதத்தை மிகவும் அழகாகக் கூறினார்.

பிறகு புதுக்கோட்டை ஆயுர்வேத ஸாஹித்ய சிரோமணி ஸ்ரீ K. வைத்யநாத சாஸ்திரிகள் அவர்கள் திரிதோஷ ஸித்தாந்தத்தைப்பற்றி ஒரு உபன்யாசம் செய்தார்கள்.

பிறகு திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் மேத்ய ரஸாயனம் என்பதுபற்றி ஸம்ஸ்கிருதத்தில் சுமார் ஒன்றரை மணி நேரம் ஓர் அழகான உபன்யாஸம் செய்தார் நல்ல தாரண சக்தியுடன் ஏகஸந்த கிரகணம் செய்யும் ஸூக்ஷ்ம சக்தியுடன் கூடிய புத்தி மேதை எனக் கூறினார். ரஸாயன சப்தத்தை விளக்கிக் கூறுகையில் கெமிஸ்டிரி என்ற அர்த்தத்தில் அப்பதம் உபயோகப்படுத்தப்படுவது மிகவும் வருந்தத் தக்கவிஷயமாகக் கூறினார். மேதை வளர்க்கும் உபாயக்களில் ஆசனங் களும், மந்திரங்களும் உபயோகப்படும் விதத்தைக்கூறி, நித்யம், நைமித்தி கம், காம்யம் என்ற மூன்றுவித ரஸாயன முறைகளையும் அழகாக விளக்கினார். அன்னாரின் உபன்யாஸம் அன்று பல கருத்துக்களடங்கின தாகவே அமைந்தது.

முடிவில் தன்யவாதத்துடன் சபை இனிது கலைந்தது.

---

வரப்பெற்றோம்.

## அஷ்டோத்தர சத நாம ஸ்தோத்திரங்கள்.

இதில் கணபதி, சுப்பிரமணிய, சிவ, ராம, கிருஷ்ண, லக்ஷ்மி, லலிதா, ஸரஸ்வதி, தன்வந்தரி, நவக்ரஹங்கள், அஷ்டோத்திர நாம ஸ்தோத்திரமும், அர்ச்சனையும், தேவநாகரி எழுத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கிறது. பக்தர்களுக்கு நித்ய பூஜைக்கும், பாராயணத்துக்கும் மிகவும் உபயோகமானது. தன்வந்தரி பப்ளிஷர் களால் பிரசுரிக்கப்பட்டது.

கிடைக்குமிடம்:—

இண்டியன் இண்டஸ்டிரியல் கம்பெனி,

**363**, எஸ்ப்ளனேட், சென்னை.

199580